**01.09.2022**

**பெயர்: கிருஷ்ணன்**

**O.S.No.** 201/2017 (**D.W.**2)

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

அசல் வழக்கு எண்.292/93 வழக்கு உச்சாகௌடர் என் அப்பாமீது தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு நீதிமன்றத்தின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொண்டார் என்றால் இல்லை அவர் நடத்தாமல் விட்டுவிட்டார். நான் சொல்வது பொய்யானது என்றும் நான்தான் பி.வா.சா.ஆ-09 மற்றும் 10ன்படி அந்த மனு மற்றும் நீதிமன்ற அனுமதி உத்தரவை தாக்கல் செய்தேன் என்றால் இல்லை. நான் குறிப்பிட்டுள்ள 137/2012 வழக்கு வாரிசுதாரர்களை சேர்க்காததால்தான் தள்ளுபடி ஆனது என்றும் அது தகுதியின் அடிப்படையில் தீர்மானம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அதனால் 05,06 பிரதிவாதிகளின் பாகத்தை பிரித்து கொடுக்குமாறு கோரினால் சரியல்ல.